# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil ₹ 10/-

India's National Spiritual Newspaper

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE
REACHING NATIONS

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXX YEAR OF OUR LORD JESUS CHRIST, 2025 JUNE No. 06


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 27:1- 6

1. கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படு வேன்? கர்த்தர் என் ஜீவனின் பெல னானவர், யாருக்கு அஞ்சுவேன்?
2. என் சத்துருக்களும் என் பகைஞருமா கிய பொல்லாதவர்கள் என் மாம்சத் தைப் பட்சிக்க, என்னை நெருக்குகை யில் அவர்களே இடறிவிழுந்தார்கள்.
3. எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங் கினாலும், என் இருதயம் பயப்படாது; என்மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையா யிருப்பேன்.
4. கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும் படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தரு டைய ஆலயத்தில் தங்கியிருப்ப தையே நாடுவேன்.
5. தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்.
6. இப்பொழுது என் தலை என்னைச் சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்க ளுக்கு மேலாக உயர்த்தப்படும்; அதினிமித்தம் அவருடைய கூடாரத்திலே நான் ஆனந்த பலிகளையிட்டு, கர்த்தரைப்பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

## உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை விட்டுச் செல்கிறீர்களா?

~ சகோதரி ஏஞ்சல்

**ARE YOU LEAVING A LEGACY TO YOUR CHILDREN?**



நம்முடைய ஆண்டவரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், நமது **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** சார்பாக, உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

இப்போதுதான் தொடங்கிவிட்டதுபோல் உள்ள 2025ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட ஐந்து மாதங்களை கடந்து ஆறாவது மாதத்தில் அடியெடுத்து வைத்து விட்டோம் என்று நம்புவது கடினமாகவே உள்ளது. **... வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும்** ... ஆபகூக் 3:2 என்பதை இது நினைவுபடுத்துகிறது. இந்த ஆண்டின் இரண்டாம் பாதியில் கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பத்தையும், உங்கள் ஊழியத்தையும், உங்கள் வணிகத்தையும், தொழிலையும் அல்லது படிப்புகளையும் தம்முடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் உயிர்ப்பிக்க வேண்டுமென வேண்டுதல் செய்கிறேன்.

லூக்கா 15ம் அதிகாரம், வேதாகமத்தில் நன்கு அறியப்பட்ட ஒன்றாகும். கடந்த மாதம் தொலைந்துபோன ஆடுகளின் உவமையைப் பற்றி எழுதினேன். மேய்ப்பன் தொள்ளாயிரத்தொன்பது ஆடுகளை விட்டுவிட்டுத் தேடிச் சென்றது – மீதமுள்ள 99 ஆடுகள், தொலைந்து போகாத 9 நாணயங்கள் மற்றும் தந்தையின் அன்பைப் புரிந்து கொள்ளத் தவறி தனது தந்தையின் வீட்டை விட்டு வெளியேறிய ஒரு மகன் என்று அந்த முழு அதிகாரத்தையும் 99:9:1 என சுருக்கமாகக் கூறலாம்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....




அழைப்பின் எதிரொலி!

**கிறிஸ்தவ யூடியூப் சானல்!**

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...




**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

**HON. EDITOR-IN-CHIEF**

Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

**Ex MANAGING EDITOR**

Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**GENERAL MANAGER**

Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.

**ADMINISTRATION**

Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

**EDITORIAL BOARD**

Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.

**EDITOR, PUBLISHER & PRINTER**



Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858
95661 31858

**E.MAIL**

sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**

www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.org

**YOUTUBE CHANNEL**

Echo of His Call


*நம்முடைய சகாயம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருடைய நாமத்தில் உள்ளது. - சங்கீதம் 124:8*

கர்த்தருக்குள் பிரியமானவர்களே,

உங்களுக்கு நன்மை உண்டாவதாக!

நம் தேவன் நல்லவர். அவர் நம்மை நடத்தி வருகிற எல்லா பாதைகளுக்காகவும் அவருக்கு நன்றி தெரிவிக்கிறோம். நம்முடைய கடினமான பாதையில் நம்முடன் பாச உணர்வுடன் நம்மோடு இணைந்து பயணம் செய்யும் எல்லா உடன் ஊழியர்களுக்காகவும், சகோதர சகோதரிகளுக்காகவும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம். தொடர்ந்து உங்கள் ஜெபங்களை நாடி நிற்கிறோம்.

கடந்த மாதம் நடந்த **வேனிற்கால விடுமுறை வேதாகமப் பள்ளிகளை (Vacation Bible School)** தேவன் வெகுவாய் ஆசீர்வதித்தார். நம் உடன் ஊழியர்களும், சபை மக்களும் கடுமையாக உழைத்தனர். ஜெபித்த, காணிக்கைகளை அளித்த உங்களுக்கு தகுந்த பலனை கட்டாயம் நம் தேவன் தருவார். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



சந்தோஷபுரத்தில் நடைபெற்ற நமது வேனிற்கால விடுமுறை வேதாகமப் பள்ளி

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** 2025–2026–ம் கல்வி ஆண்டிற்கான ஆசிரியர் குழுக் கூட்டம் 21.04.2025 அன்று சிறப்புடன் நடைபெற்றது. இக்கல்வி ஆண்டிற்கான செயல்திட்டங்கள் தீர்மானிக்கப்பட்டன.



நமது நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்
2025–2026–ம் கல்வி ஆண்டிற்கான ஆசிரியர் குழுக் கூட்டம்

தொடர்ந்து நம் **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளிலும், செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியிலும்** 2025–2026–ம் கல்வி ஆண்டிற்காக மறுபடியும்

வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களின் முதல்வர்களையும், உடன் பணியாளர்களையும் தேவன் வல்லமையாக பயன்படுத்த உங்கள் ஊக்கமான ஜெபங்கள் தேவைப்படுகின்றன.

உங்கள் உடன் ஊழியர்களாகிய எங்களுக்கு தேவன் தேவையான கிருபைகளை நல்க தேவனை வேண்டிக் கொள்ளுங்கள்.

அன்புடனும், ஜெபத்துடனும்,

**கர்த்தரின் ஊழியத்தில், அழைப்பின் எதிரொலி ஊழியக் குழுவினர்.**

E.mail : sam@echoofhiscall.org


## உடனடி தேவை

**சேப்பாக்கம் கிறிஸ்தவ அலுவலகத்திற்கு**

1. டிரைவர்கள் (தங்கி வேலை செய்ய)
2. கம்ப்யூட்டர் பணியாளர்கள்
3. பிரிண்டிங் பிரஸ் ஆப்ரேட்டர்கள்

தொடர்புக்கு: (+91) 98412 71858, E.mail: sam@echoofhiscall.org


## அறிவிப்பு

*(+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய போதகரின் பிரதான இரு செல்போன் எண்களை யும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

– ஆசிரியர்


## உடனடி தேவை

**ஆசிரியர்கள்**
(எல்லா பாடங்களுக்கும்)

**செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**
An *Echo of His Call* Institution
விஜயநகரம், மேடவாக்கம், சென்னை – 100.

சிறந்த கல்வித் தகுதி, அனுபவம், அர்ப்பணிப்பு மற்றும் ஊழிய நோக்குடன் பணிபுரியும் கிறிஸ்தவர்கள் தேவை.

*சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.*

E.mail: sam@echoofhiscall.org
WhatsApp: (+91) 98412 71858


## மிக அவசர செய்தி!




நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், இ.மெயில் (மின்னஞ்சல்) முகவரிகளையும், வாட்ஸ்அப் எண்களையும் கடிதம் மூலமோ, இ.மெயில்(மின்னஞ்சல்) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்அப் மூலமோ குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள்.

தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள்!

எங்கள் முகவரி:


**ECHO OF HIS CALL,**
10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005, India
Cell: (+91) 98412 71858 / 98410 71858 E.mail: sam@echoofhiscall.org


... 1–ம் பக்கத் தொடர்ச்சி



**தந்தையின் அன்பு!**

ஜூன் மாதத்தில் இந்தியாவில் தந்தையர் தினம் கொண்டாடப்படுவதால், அதே அதிகாரத்திலிருந்து எடுக்கப்பட்ட தந்தையின் அன்பைப் பற்றி தொடர்ந்து சிந்திக்க வழிவகுத்தது என்று உணர்ந்தேன்.

ஒரு தந்தையின் ஸ்தானத்தை நிரப்புவதற்கு அப்பாற்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு தனித்து போராடும் ஒருசில தாய்மார்களின் நம்பமுடியாத வலிமையையும், தியாகத்தையும் நாம் இங்கு மறக்கலாகாது. இது ஒரு அசாதாரணமும், சவாலானதுமான ஸ்தானம், நீங்கள் அந்தப் பாதையில் சென்று, ஒரு தந்தையின் பாதையில் அடியெடுத்து வைக்கும் ஒரு பெண்ணாக இருந்தாலும் – உங்களுக்கு மனமார்ந்த பாராட்டுகள்!

யோவான் ஸ்நானகனின் தந்தையான சகரியாவைப் போல, இன்னும் குழந்தைகளைப் பெறக் காத்திருந்து ஜெபிக்கிறவர்களையும் நான் மதிக்கிறேன். உங்களுக்கு இன்னும் குழந்தைகள் இல்லா விட்டாலும், வளர்க்கவும், வழிகாட்டவும், போற்றவும் தேவன் உங்களுக்குப் பல ஆவிக் குரிய பிள்ளைகளை எழுப்பி ஆசீர்வதிப்பார் என்று நான் நம்புகிறேன். கர்த்தருக்குள் திடன் கொள்ளுங்கள்.

நான் ஒருமுறை தந்தையின் அன்பைப் பற்றிய பிரசங்கத்தைப் பிரசங்கித்த பிறகு, மிகவும் மனவேதனையுடன் ஒரு இளம்




பெண் என்னை அணுகினாள். அவளது தந்தையுடனான வேதனையான அனுபவங் கள் காரணமாக, ஒரு தந்தையின் அன்பை தேவனுடைய அன்பிற்கு ஒப்பிட்டபோது அதை அவளால் புரிந்து கொள்ள முடிய வில்லை. எந்த மாம்சத்துக்குரிய தந்தையை யும் போல அல்லாமல், அதையும்விட நமது பரலோகப் பிதாவின் அன்பு எவ்வளவு நிறைவானதும், குணப்படுத்துகிறதாயும்,

நிபந்தனையற்றதாயும் இருக்கிறது என்பதை நான் அவளுக்கு அன்புடன் விளக்க வேண்டியிருந்தது. அப்போதுதான் தேவனுடைய அன்பு என்றால் உண்மையில் என்ன என்பதை அவள் புரிந்து கொள்ளத் தொடங்கினாள்.

அனைத்து கலாச்சாரங்களிலும் ஒரு தந்தையின் பங்கு ஆழமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. அவர் பெரும்பாலும் குடும்பத்தின் தலைவராகக் கருதப்படுகிறார். தனது குடும்பத்தைப் பாதுகாத்தல், முக்கியமான முடிவுகளை எடுப்பது, குழந்தைகளை வளர்ப்பது போன்ற பொறுப்புக்கள் அவருக்கு உள்ளன.

பரிசுத்த வேதாகமம், தேவனை ஒரு தந்தையாக மீண்டும், மீண்டும் சித்தரிப்பதைக் கவனிக்கும்போது மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது. இயேசுவே பிதாவோடு இந்த நெருக்கமான வழியில் உரையாற்ற நமக்குக் கற்பிக்கிறார். ... **பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே** ... மத்தேயு 6:9. வேதக்கண்ணாடியின் மூலம் – குறிப்பாக லூக்கா 15ம் அதிகாரத்தில் – ஆவிக்குரிய அல்லது மரபணு சார்ந்த அர்த்தத்தில் "தந்தை" என்றால் என்ன என்பதை நாம் ஆராய்வோம்.

இந்த அதிகாரம், ஒரு பழக்கமான உவமையைப் பின்வருமாறு விவரிக்கிறது. இரண்டு மகன்களைக் கொண்ட ஒரு பணக்கார தந்தையுடன் கதை தொடங்குகிறது. இளைய மகன், தனது சொந்த ஆசைகளால் ஈர்க்கப்பட்டு, தனது பங்கைக் கோருகிறான்; உலக இன்பங்களைத் தேடி வீட்டை விட்டு வெளியேறுகிறான். அவன் எல்லாவற்றையும் வீணாக்குகிறான். இறுதியில் தன்னை ஆதரவற்றவனாகக் காண்கிறான். பன்றிகளுக்கு கிடைக்கும் உணவாவது தனக்கு கிடைக்குமா என எண்ணி, அவற்றின் உணவை உண்ண ஏங்குகிறான். தனது மோசமான தருணத்தில், அவன் தன்



பன்றியின் உணவைப் பார்த்து ஏங்கும் இளைய மகன்!

தந்தையை நினைவு கூருகிறான். ஒரு மகனாக அல்ல, ஒரு வேலைக்காரனாக திரும்பவும் தனது தந்தையிடம் வருகிறான்.

ஆனால், அவன் வீடு திரும்பும் போது, அவனுடைய தந்தை அவனை தூரத்திலிருந்து கண்டு, அவனை அரவணைக்க ஓடுகிறார். நேர்த்தியான ஆடைகள் மற்றும் ஆபரணங்களால் அலங்கரிக்கிறார். அவன் திரும்பி வந்ததைக் கொண்டாட ஒரு பெரிய விருந்து வைக்கிறார்.

இதற்கிடையே, வீட்டில் தங்கி, தனது தந்தைக்கு உண்மையாக சேவை செய்த மூத்த மகன் மனக்கசப்புடன், தான் புறக்கணிக்கப்பட்டதாக உணர்கிறான். தந்தையின் அன்பின் ஆழத்தைப் புரிந்து கொள்ளமுடியாமல், கொண்டாட்டத்தில் சேர அவன் மறுத்துவிட்டான். முரண்பாடாக, அவன் உடல்ரீதியாக நெருக்கமாக இருந்தபோதிலும், அவன் மனரீதியாக தொலைவில் இருந்தான். இதற்கு நேர்மாறாக, இளைய மகன், தந்தையை விட்டுப் பிரிந்திருந்தபோதிலும் தன் தந்தையின் குணாதிசயத்தைப் பற்றிய சரியான புரிதலைக் கொண்டிருந்தான். இளைய குமாரன் தொலைதூர தேசத்தில் இருந்தபோதுகூட, தன் குற்றங்களை மன்னித்து தந்தை தன்னை ஏற்றுக் கொள்வார் என விசுவாசித்து, தன் தந்தையிடம் திரும்பி வந்தான்.

## நம்முடைய தேவன் ஒரு தகப்பன்:

### 1. ஒரு அன்புள்ள தகப்பன்!

இந்த உவமையில் பெரும்பாலும் இளைய மகன் மைய நபராக இருந்தாலும் கூட, அதற்குப் பதிலாக தந்தையை முக்கிய நபராகக் கருதுவோம். அவர் நம் அன்பான பரலோகத் தந்தையைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார். அவர் தனது பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் அல்லது அவர்கள் யார் என்பதன் அடிப்படையில் அல்ல, மாறாக,



ஒரு அன்புள்ள தந்தை!

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....

நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை
கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
Diploma in Theology
போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (முழு நேரம் (Residential)) (தங்கிப் படிப்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.)
உடனே அணுகவும் !
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 55 வருட அனுபவ ஸ்தாபனம்.
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்



## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2025 ஜூன் 19 முதல் ஜூலை 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஜூன் 19 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி**யின் 16 மொழிப் பத்திரிகைகளும் ஒவ்வொரு மாதமும் சரியான நேரத்தில் பிரசுரமாக ஒத்துழைத்து வரும் இணை ஆசிரியர்களுக்காக ...

ஜூன் 20 ⇨ 1969–ம் ஆண்டு முதல், நமது பத்திரிகை ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூன் 21 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி ஊழியங்களை** தாங்கி வருபவர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

ஜூன் 22 ⇨ மே 17, 2025 அன்று மகாபலிபுரத்தில் நடைபெற்ற நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரி**யின் விசேஷித்த மாணவர் கூடுகையை ஆசீர்வதித்த கிருபைக்காக...

ஜூன் 23 ⇨ நமது ஊழியங்களை ஜெபங்களினாலும், பொருளாதாரங்களினாலும் ஆதரிப்பவர்களை இதுவரை ஆசீர்வதித்து வருகிறதற்காக... ...

ஜூன் 24 ⇨ நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக்கல்லூரி**கள் மற்றும் **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**யின் 2024–25–ம் கல்வி ஆண்டு வெற்றிகரமாக நிறைவடைந்ததற்காக...

ஜூன் 25 ⇨ ஆண்டுதோறும் நமது ஊழியங்கள் அனைவருக்கும் பயனளித்து வருகின்ற கிருபைக்காக ...

ஜூன் 26 ⇨ நமது தலைமைப் போதகர் அவர்களையும், அவரது குடும்பத்தினரையும் எல்லாவித தீயசக்திகளிலிருந்தும் விலக்கிக் காத்துக் கொண்டதற்காக...

ஜூன் 27 ⇨ 2025–26ம் கல்வி ஆண்டிற்கான நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**யின் தகுதியான மாணவர்களின் சேர்க்கையை ஆசீர்வதித்த கிருபைக்காக...

ஜூன் 28 ⇨ நமது **அஞ்சல்வழி இறையியல் கல்வி** மற்றும் **வேதாகம கல்வி முறைகளைக்** கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

ஜூன் 29 ⇨ உலகளாவிய அளவில் வாலிபர் மற்றும் குழந்தைகளுக்காக தினமும் இரவு 10 மணிக்கு ஜெபிக்கும் **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசனத்தை** தொடங்க வைத்த கிருபைக்காக...

ஜூன் 30 ⇨ **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினரைக் காத்து வருகிற கிருபைக்காக...

ஜூலை 01 ⇨ நமது தலைமை மற்றும் கிளைச் சபைகளின் **வேனிற்கால விடுமுறை வேதாகமப் பள்ளிகளால்** பிள்ளைகளுக்கு கிடைத்த நன்மைகளுக்காக ...

ஜூலை 02 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** தேவசபையின் சாதனையாளர் விருது வழங்கும் விழா வெற்றிகரமாக நடைபெற்ற கிருபைக்காக......

ஜூலை 03 ⇨ நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரி**களின் மாணவர்களைப் பாதுகாக்கின்ற கிருபைக்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஜூலை 04 ⇨ உலகமெங்கும் களப்பணியாளர்களுக்கு தேவ பாதுகாப்பு கிடைத்திட ...

ஜூலை 05 ⇨ உலகமெங்கிலும் சமாதானம் நிலவிட ...

ஜூலை 06 ⇨ ஒடுக்கப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரநிலை மேம்படவேண்டி...

ஜூலை 07 ⇨ தூரதேசங்களில் உள்ள சந்திக்கப்படாத மக்கள் நடுவே, சுவிசேஷ பணியில் ஈடுபட்டிருக்கிற மிஷனரிகளின் தேவ பாதுகாப்பிற்காக ...

ஜூலை 08 ⇨ இம்மாதத்திற்கான நம் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்படவேண்டி...

ஜூலை 09 ⇨ அனைத்து நாடுகளுக்கும் தேவபயமுள்ள தலைவர்களை தந்து ஆசீர்வதிக்க வேண்டி...

ஜூலை 10 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய சக்திகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க ...

ஜூலை 11 ⇨ 2025–26ம் கல்வி ஆண்டிற்கான நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரி**கள் மற்றும் **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**யின் தகுதியான மாணவர்களின் சேர்க்கைக்காக...

ஜூலை 12 ⇨ ஜூன்2, 2025 அன்று வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரி**யின் புதிய மாணவர்களுக்காக தேவ வழிநடத்துதலை வேண்டி ...

ஜூலை 13 ⇨ கர்த்தர் **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களில் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் பணியாளர்களை சேர்த்திட வேண்டி...

ஜூலை 14 ⇨ உலகிலுள்ள ஆவிக்குரிய தலைவர்களுக்கு நல்ல ஞானத்தையும் பலத்தையும் கொடுக்க வேண்டி...

ஜூலை 15 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதான கட்டளைப் பங்காளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நலன்களுக்காக...

ஜூலை 16 ⇨ கர்த்தரின் கருணைமிகு சமாதானம் நமது ஊழியக் கூடுகைகளிலும் மற்றும் சகலவித நிர்வாக செயல்பாடுகளிலும் நிறைந்திருக்க வேண்டி...

ஜூலை 17 ⇨ பயங்கரவாதம் மற்றும் வன்முறையிலிருந்து உலகநாடுகளைப் பாதுகாக்க வேண்டி...

ஜூலை 18 ⇨ நமது ஸ்தாபன ஊழியர்கள் மற்றும் அச்சகப் பணியாளர்கள் சுகபத்திரமாக பாதுகாக்கப்பட...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

தனது கிருபை மற்றும் இரக்கத்தின் அடிப்படையில் முழுமையாக நேசிக்கும் தேவன்.

அவரது அன்பு நிலையானது, அசைக்க முடியாதது மற்றும் நிபந்தனையற்றது.

யாத்திராகமம் 4:22 இல், இஸ்ரவேல் மக்கள் தேவனுக்கு முதற்பேறானவர்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். அவரிடமிருந்து மீண்டும் மீண்டும் விலகிச் சென்றபோதிலும், அவர் தமது பலமுள்ளதும், நீட்டப்பட்டதுமான கரத்தால் அவர்களைத் திரும்ப திரும்ப மீட்டெடுத்தார். அவருடைய பிள்ளைகள் மீதான அவருடைய அன்பு ஒருபோதும் மாறாது.

அதேபோல் இந்த கதையில், தந்தை தனது மகனின் தோல்விகளுக்காக, அவனைக் கண்டிக்கவோ அல்லது விமர்சிக்கவோ இல்லை. மாறாக, தன் மகனை இருகரம் நீட்டி வரவேற்று மகிழ்ச்சியுடன் அவன் திரும்பி வந்ததைக் கொண்டாடுகிறார். தந்தையானவர் கடந்த காலத்தைப் பற்றி சிந்திக்காமல், மீண்டும் தன் மகன் இணைந்ததில் மகிழ்ச்சியடைகிறார்.

பெற்றோராகிய நாமும் சில நேரங்களில் நம் பிள்ளைகளைக் கடுமையாக நடத்துவது அல்லது அவர்களிடம் அன்பற்ற வார்த்தைகளால் பேசுவது ஏற்றுக் கொள்ளத் தக்கது என்று நினைக்கிறோம். இருப்பினும், நம் குழந்தைகளை ஒழுங்குபடுத்தும்போது கூட நாம் மென்மையாகவும், கவனத்துடனும் இருக்க வேண்டும். அவர்களைக் கோபப் படுத்தாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று வேதம் நமக்கு நினைவூட்டுகிறது. நாம் கர்த்தருடைய இருதயத்தைப் பிரதிபலிக்கும் தந்தையர்களாக மாற ஆண்டவர் உதவுவாராக!

இதுதான் அளவிட முடியாத இரக்கமுள்ள, தாராளமாகக் கொடுக்கப்பட்ட, நமது பரலோகத் தந்தையின் அன்பு. அவர் நம் தகுதியின் அடிப்படையில் அல்ல, மாறாக அவரது கிருபை மற்றும் இரக்கத்தின் மிகுதியால் நம்மை ஏற்றுக் கொள்கிறார்.

**'பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக'** என்று எபேசியர் 6:4-ல் வேதாகமம் நமக்குக் கற்பிக்கிறது.

நம் நல்ல தகப்பனாகிய தேவன் எப்போதும் நாம் அவரிடம் திரும்புவதற்காகக் காத்திருக்கிறார். நாம் அவரிடமிருந்து எவ்வளவு தூரம் விலகிச் சென்றிருந்தாலும், அவர் அன்புடனும் திறந்த கரங்களுடனும் நம்மை வரவேற்க ஆயத்தமாக இருக்கிறார்.

## 2. ஏங்கும் தகப்பன்!

**... அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்.** லூக்கா 15:20. என்னே! நெகிழ்ச்சியான தருணம்! தனது மகன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கையில், ஒவ்வொரு நாளும் காத்திருந்து ஏங்கிக்கொண்டிருந்த ஒரு தந்தையின் இருதயத்தை இக்காட்சி வெளிப்படுத்துகிறது.

அதேபோல், நம் பரலோகத் தகப்பன் நம் ஒவ்வொருவருடனும் மீட்டெடுக்கப்பட்ட உறவுக்காக ஏங்குகிறார். ஆதாம், ஏவாளுடன் இதுபோன்ற ஒரு ஆழமான, நெருக்கமான உறவைத்தான் அவர் விரும்பினார். இன்றும் அவர் நம்மிடமிருந்து விரும்புவது இதைத்தான் – இன்றும் நமக்காக தேவன் ஏங்கிக் காத்திருக்கிறார்!

**ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார் ...** ஏசாயா 30:18. உவமையில் உள்ள தந்தையைப் போலவே, அவர் தனது இரக்கத்தையும் கிருபையையும், தயவையும் அருளக் காத்திருக்கிறார்.

நாம் அவரிடம் திரும்பும்போது, அவர் நம்மை தண்டிக்கவோ அல்லது அவமானப்படுத்தவோ மாட்டார். மாறாக, அவர் நம்மை அரவணைத்து, தம்முடைய நன்மையால் நம்மை ஆசீர்வதிப்பார். நீங்கள் தேவனிடமிருந்து தொலைவில் இருப்பதாக உணர்ந்தால், அவருடைய அன்பிற்கு தகுதியற்றவராக உணர்ந்தால் அல்லது அவரிடம் திரும்பி வரத் தயங்கினால் – இதை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் ஒரு படி தூரத்தில் இருக்கிறீர்கள். அவர் இப்போது உங்களுக்காகக் காத்திருக்கிறார்.

## 3. ஒரு மரபை விட்டுச் செல்கிறீர்கள்!

இது தந்தையின் ஒரு முக்கியமான ஆனால் பெரும்பாலும் கவனிக்கப்படாத அம்சமாகும். “தந்தையைப் போல மகன்” என்ற பழைய பழமொழி ஆழமான உண்மையைக் கொண்டுள்ளது. தந்தையர் தங்கள் குணாதிசயங்களையும், பழக்க வழக்கங்களை தன் சந்ததியினருக்கு விட்டுச் செல்வதோடு மட்டுமல்லாமல் – அவர்கள் ஆவிக்குரிய பண்புகளையும் வழங்குகிறார்கள். பல இளைஞர்களுக்கு, அவர்களின் தந்தை அவர்களின் முதல்



பிள்ளைகள் தந்தையிடமிருந்து ஏராளமான விஷயங்களை கற்றுக் கொள்கிறார்கள்!

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக “அழைப்பின் எதிரொலி” அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) “Echo of His Call Educational Trust” என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
   தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
13. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
14. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
15. தமிழ் ஆரதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
16. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
17. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
18. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
20. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
21. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
22. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
23. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
24. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
25. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
26. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
27. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
28. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
29. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
30. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
31. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
32. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
33. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
34. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

### I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

**கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.**
**- சங்கீதம் 136:1,23**

எனது ஊழியத்தின் ஆரம்ப நாட்களிலிருந்தே தேவ மகிமைக்காகவும், அவரது ராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காகவும் எந்த வேலையையும் துணிந்து எடுக்கவும், எந்த சவாலையும் சந்திக்கவும்கூட திட மனதையும் தேவன் எனக்கு அருளியிருந்தார். எந்த பிரதிபலனையும் உடனேயே எதிர்பார்த்து நான் செயல்படவில்லை. 1976ஆம் ஆண்டிலிருந்து 1986 வரை, நான் அரசாங்க பணியில் இருக்கும்பொழுது, விடுப்பு எடுத்துக் கொண்டு, எனது சொந்தச் செலவில் சுவிசேஷ சுற்றுப் பயணங்களை, இந்தியாவின் பல பகுதிகளில் சிறிய அளவிலான சுவிசேஷக்கூடங்கள் போன்றவற்றை ஒழுங்கு செய்து நடத்தி வந்தேன்.

ஓரிரு மாதங்கள் வரைக்கும் எனது ஆவிக்குரிய நண்பர்களோடு இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் சொல்லப்படாத இடங்களில் சென்று அநேக ஆயிரக்கணக்கான மக்களை இயேசுவிடம் வழிநடத்த தேவன் உதவி செய்தார். எல்லாருடைய ரயில் டிக்கட்டுக்களுக்காகவும், பேருந்து டிக்கட்டுக்களுக்காகவும், தங்கும் செலவுகளுக்காகவும் தேவனையே நோக்கிப் பார்க்க வேண்டியதாயிருந்தது. தேவனும் அற்புதவிதமாக எனக்கு உதவி செய்தார்.

இந்த ஊழியங்களின் மூலமாக செங்கல்பட்டு மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், மதுரை மாவட்டம், திருச்சி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், கொடைக்கானல், ஊட்டி, திருவனந்தபுரம், பீளமேடு, இடுக்கி, வண்டிபெரியார், விஜயவாடா, பங்களூர், மைசூர் போன்ற மாவட்டங்களின் குக்கிராமங்களுக்குச் செல்ல தேவன் கிருபை செய்தார்.

அவ்வாறு பல இடங்களுக்குச் செல்லும்போது எங்களது வாத்தியக்கருவிகள், சுவிசேஷக் கைப்பிரதிகள் போன்றவைகளை பேருந்துகள், ரயில்கள் போன்றவற்றில் ஏற்றிச் செல்லும்போது பலவித சரீர கஷ்டங்களை அனுபவித்திருக்கிறேன். என்னுடைய பொருளாதார நிலைமையின் காரணமாக ஊழியத்திற்கென்று ஒரு வாகனம் வாங்க என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. ஆனால், கர்த்தர் எனது மனநிலையையும், என்னைக் குறித்த சாட்சிகளையும் அறிந்திருந்தார். ... **உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே.** எபிரெயர் 6:10.

பிற்காலங்களில் என்னோடு ஊழியம் செய்த அநேகரை தேவன் ஆசீர்வதித்து அவரது தோட்டத்தில் வல்லமையாக உபயோகிப்பதை நான் அறிந்து கொண்டேன். என்னையும் தேவன் ஆசீர்வதித்து, இக்காலத்துக்கு ஏற்ற நவீன உபகரணங்களையும், கார், வேன், வைராக்கியமுள்ள சக ஊழியர்களையும் கொடுத்துள்ளார். அதனால் இரட்சிக்கப்படாத அநேக மக்களுக்கு சுவிசேஷம் சொல்ல தேவன் உதவி செய்கிறார். என்னை பல தேசங்களுக்கும் கொண்டு சென்று அநேக ஆவிக்குரிய நண்பர்களையும் பல தேசங்களில் தந்திருக்கிறார்.

அந்த தேவன் இன்றும் உயிரோடு இருக்கிறார். எந்தவித உடனடி பிரதிபலன்களையும், உயர்ந்த பதவிகளையும், எதிர்பார்க்காதே, தீய குறிக்கோள் இல்லாத மக்களை அவர் தேடிக் கொண்டிருக்கிறார். **உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்.** பிரசங்கி 11:1. அவர் ஒருவனுக்கும் கடனாளியல்ல.

தேவனது ராஜ்யத்திற்காக எதையாகிலும் செய்ய வேண்டுமென்று நினைத்தால் அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கற்றுக் கொண்டுள்ளேன். சூழ்நிலைகளைக் கவனிக்கக் கூடாது. **காற்றைக் கவனிக்கிறவன் விதைக்க மாட்டான்; மேகங்களை நோக்குகிறவன் அறுக்க மாட்டான்.** பிரசங்கி 11:4. உலகமும் உலக மக்களும்கூட உங்களுக்கு உதவி செய்ய வருவார்கள்.

இக்காலத்தில், மக்கள் தங்களுடைய சுகத்தையோ, பணத்தையே, தாலந்துகளையோ, தேவராஜ்யத்தின் முதலீடாக வைக்க முன்வர தயங்குகின்றனர். ஆனால், உடனடியாக பெரிய உயர்வுகளை மட்டும் எதிர்பார்க்கின்றனர். அன்பு நண்பரே, இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் நான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன். உங்களையும் அவர் ஆசீர்வதிக்க முடியும். இயேசு கிறிஸ்துவுக்காக எதையாகிலும் செய்ய முன் வருவீர்களா ? உங்களது சிலுவையை எடுத்துக் கொண்டு அவரைப் பின்பற்றி செல்ல ஆயத்தமா ? எப்படியாகிலும், எவ்வளவு செலவு செய்தாகிலும் இயேசு கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தைச் சுமந்து செல்லும் மக்களை தேவன் தேடிக் கொண்டிருக்கிறார். (1 கொரிந்தியர் 9:22).

**இவ்வார்த்தைகளை வாசிக்கும் நீங்கள், கர்த்தர் உங்களுக்காக ஒரு திட்டம் வைத்திருக்கிறார் என்று அறிய வேண்டும். இவ்வுலகத்தின் பணம், ஆரோக்கியம், உறவுகள், செல்வாக்கு, புகழ் ஆகியவைகள் ஒரு நாளில் உங்களை ஏமாற்றும். ஆனால் இயேசு** *உங்களைத் திக்கற்றவர்களாக விட மாட்டார்.* (யோவான் 14:18). **இன்றே ஒரு தீர்மானம் எடுங்கள். ஒரு மிகப் பெரிய பிரதிபலன் உங்களுக்காகக் காத்திருக்கிறது.**

************

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

முன்மாதிரி ஆவார். பிள்ளைகள் தந்தையிடமிருந்து – எப்படி வாழ வேண்டும், எப்படி வாழக்கூடாது போன்ற நிறைய விஷயங்களை கற்றுக் கொள்கிறார்கள்.

துரதிருஷ்டவசமாக, பெரும்பாலும் எதிர்மறையான பண்புகளே மிக எளிதாகக் கடத்தப்படுகின்றன. இருப்பினும், தகப்பன்மார்கள் உணர்ந்தாலும், உணராவிட்டாலும் ஒரு நீடித்த குணாதிசயத்தினை விட்டுச் செல்கிறார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளின் ஆவிக்குரிய வாழ்க்கையை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.

கர்த்தர் என் பெலனும், என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானவர்; அவரே என் தேவன், ... அவரே என் தகப்பனுடைய தேவன், அவரை உயர்த்துவேன்.

யாத்திராகமம் 15:2

**என் தகப்பனின் தேவன்** (யாத்திராகமம் 15:2) என்ற சொற்றொடர், தேவன் மீதான விசுவாசம் சிறு வயதிலேயே – ஒரு தகப்பனின் செல்வாக்கின் மூலம் – கற்றுக் கொள்ளப்பட்டது என்பதைக் காட்டுகிறது.

உபாகமம் 32:7

**பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப் பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்;**

சங்கீதம் 44:1

**தேவனே, எங்கள் பிதாக்களுடைய நாட்களாகிய பூர்வநாட்களில் நீர் நடப்பித்த கிரியைகளை அவர்கள் எங்களுக்கு அறிவித்தார்கள்; அவைகளை எங்கள் காதுகளால் கேட்டோம்.**

சங்கீதம் 78:34

மேலும் **அவைகளை நாங்கள் கேள்விப்பட்டு அறிந்தோம்; எங்கள் பிதாக்கள் அவைகளை எங்களுக்குத் தெரிவித்தார்கள். பின்வரும் சந்ததியான பிள்ளைகளுக்கு நாங்கள் அவைகளை மறைக்காமல், கர்த்தரின் துதிகளையும், அவருடைய பலத்தையும், அவர் செய்த அவருடைய அதிசயங்களையும் விவரிப்போம்.** சங்கீதம் 78:3–4

பிள்ளைகள் தங்கள் தந்தையிடமிருந்து கற்றுக் கொள்கிறார்கள், என்பதை இந்த வசனங்கள் தெளிவுப்படுத்துகின்றன. மேலும் அடுத்த தலைமுறைக்கு ஆவிக்குரிய ஞானத்தையும், தெய்வீக மதிப்புகளையும் கடத்துவது ஒவ்வொரு தந்தையின் பொறுப்பாகும்.

துரதிருஷ்டவசமாக, நம் பிள்ளைகளின் வாழ்க்கையில் பல பாவங்கள் முந்தைய தலைமுறையினரிடமிருந்து கடத்தப்பட்ட வடிவங்களில் வேரூன்றியுள்ளன. ஆனால், சாபத்தின் ஒரு பாதையை அல்ல, ஆசீர்வாதத்தின் பாதையை நாம் விட்டுச் செல்ல வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம்.

இஸ்ரேல் மற்றும் யூதாவின் ராஜாக்களிடையே, பல உதாரணங்களை வேதாகமம் நமக்கு அளிக்கிறது. குறிப்பாக 2 இராஜாக்கள் 21:21 இல், மனாசேயின் மகன் ஆமோனைப் பற்றி நாம் வாசிக்கிறோம்.

அவன் தன் தகப்பன் நடந்த எல்லா வழிகளிலும் நடந்தான்; தன் தகப்பன் சேவித்த விக்கிரகங்களைச் சேவித்து, அவற்றை தொழுது கொண்டான்.

என்னே ஒரு சோகம்!

**சாலொமோன் வயதானபோது, அவருடைய மனைவிகள் அவரை மற்ற தெய்வங்களைப் பின்பற்ற வழிநடத்தினர். எனவே, அவருடைய இருதயம் அவருடைய தந்தையான தாவீதின் இருதயத்தைப்போல, அவருடைய தேவனாகிய கர்த்தருக்கு முழுமையாக அர்ப்பணிக்கப்படவில்லை.**



சாலொமோனின் மனைவிகள் அவரை மற்ற தெய்வங்களைப் பின்பற்ற வழிநடத்தினர்.

(1 இராஜாக்கள் 11:4–9) வேதம் நெடுகவே, தெய்வீக பாராம்பரியத்தை விட்டுச் செல்லத் தவறியவர்களாய், தங்கள் பிள்ளைகளுக்கும் அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் அழிவை ஏற்படுத்திய பல தந்தையர்களை நாம் காண்கிறோம். இதற்கு நேர்மாறாக, ஆசா, யோசபாத் மற்றும் யோசியா போன்ற ராஜாக்கள் கருத்தாக தங்கள் தந்தையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, நீடித்த விசுவாச மரபுகளை நிறுவினர். அவர்களின் கீழ்ப்படிதல் அவர்களின் சொந்த வீடுகளை ஆசீர்வதித்தது மட்டுமல்லாமல், அண்டை நாடுகளுக்கும் அமைதியைக் கொண்டு வந்தது. ... **யூதாவைச் சுற்றியுள்ள அனைத்து தேசங்களின் மீதும் கர்த்தரால் உண்டான பயங்கரம் வந்ததினால், அவர்கள் யோசபாத்துக்கு எதிராகப் போராடவில்லை. . . .** (2 நாளாகமம் 17:10) பிரியமான நண்பர்களே! நம் குழந்தைகளுக்கும் இன்னும் வரவிருக்கும் தலைமுறைகளுக்கும் நாம் எந்த வகையான பாரம்பரியத்தை விட்டுச் செல்வோம்?



அனைத்து தேசங்களின் மீதும் கர்த்தரால் உண்டான பயங்கரம் வந்தது

கர்த்தருடைய ஊழியர்கள் கூட இந்த ஆபத்திலிருந்து விடுபடவில்லை. மோசே, ஏலி, சாமுவேல் மற்றும் தாவீது ஆகிய ஒவ்வொருவரும் கர்த்தரின் சிறந்த ஊழியர்கள். தந்தையர்களாக தங்கள் பாத்திரங்களில் போராடினர். மோசே யோசுவாவுடன் இணைந்தது போலவும், எலியா, எலிசாவுடன் இணைந்தது போலவும், ஆவிக்குரிய பண்புகளை உருவாக்குவதில் நாம் வைராக்கியமாக இருக்கலாம். ஆனால், நம் சொந்த பிள்ளைகளை கர்த்தருடைய பயத்திலும், அறிவிலும் வளர்ப்பதற்கு நாம் சமமாக உறுதி பூண்டிருக்கிறோமா?

கெட்ட குமாரனின் கதையைக் கவனியுங்கள். அவனிடம் முரட்டாட்டமும், வீண்விரயமும் இருந்தபோதிலும், தந்தையின் ஏக்க அன்பு ஒருபோதும் அசைக்கப்படவில்லை. பரலோகத் தந்தையும் இந்த உவமையின் மூலம், நம்மை அன்பான, பொறுமையான பெற்றோராக இருக்க அழைக்கிறார். நீடித்த நம்பிக்கை நிறைந்த ஒரு சுதந்திரத்தை விட்டுச் செல்கிறார் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. நம் பிள்ளைகள் தேவ பிள்ளைகளாக, அவருடைய வழிகளில் நடக்க, அவருடைய கிருபையையும், விசுவாசத்தையும் மாதிரியாக வெளிப்படுத்த கர்த்தர் நமக்கு அதிகாரம் அளிப்பாராக!

************

Posted at "Egmore RMS Patrika Channel" RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

### YouTube (யூடியூப்)

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### 1. Bank : State Bank of India

| | | |
|---|---|---|
| Branch | : | Triplicane, Chennai-5 |
| Name | : | S. Sam Selva Raj |
| A/C No. | : | 1023 2934 679 |
| IFSC | : | SBIN 00 00 249 |
| SWIFT CODE | : | SBI NIN BB 455 |

### 2. Bank : ICICI Bank

| | | |
|---|---|---|
| Branch | : | Anna Salai, Chennai-6 |
| Name | : | Echo of His Call |
| A/C No. | : | 6038 0502 2319 |
| IFSC | : | ICIC 000 6038 |

### 3. Bank : State Bank of India

(This Account is for Tax Exemption for Indians only )

| | | |
|---|---|---|
| Branch | : | Triplicane, Chennai-5 |
| Name | : | Echo of His Call Educational Trust |
| A/C No. | : | 1023 2923 805 |
| IFSC | : | SBIN 00 00 249 |

Google Pay: 98410 71858
PayPal : SAM SELVA RAJ
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

❁ வருட சந்தா ரூ. 100/– ❁ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.


## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**


**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**


**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS Patrika Channel"**
**on 28th MAY 2025**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**


*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**